பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆவணி 19உ (4—9—67) திங்கள் ★ வெளியூர் : ஆவணி 20உ (5—9—67) செவ்வாய் [இதழ் : 69

நாளை

'நம் நாடு'

இதழில்

★ காமராசரைக் கவனித்தீர்களா?

★ பாட்டில் வருகிறார்-- பராக்! பராக்!

சென்னைச் சீரணியினரின் சீரிய பணி

நகரத் துப்புரவுப் பணியில் ஈடுபாடு

அமைச்சர்கள்--அமைச்சர்களின் மனைவியர்-- சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற காட்சி

சென்னை, செப். 3—

சென்னை மாவட்டச் சீரணியின் ஆக்கப் பணி, இன்று மாநகரின் 12 தொகுதிகளிலும் துவங்கியது.

ஆங்காங்கு அமைச்சர்களும், அமைச்சர்களின் துணைவியரும், சட்டமன்ற—மேலவை—மாநகராட்சி உறுப்பினர்களும் பங்கேற்று நகரத் துப்புரவுப் பணியைத் துவக்கிவைத்தனர்.

அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், திருமதி சத்தியவாணி முத்து, சாதிக்பாட்சா, முத்துசாமி, கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. ஆகியோர், கூட்டுக் கோலைக் கையிலேந்தி தெருக் கூட்டியும், குப்பையை அள்ளிக் கொட்டியும் துப்புரவு பணியில் ஈடுபட்டனர்.

மற்றும் அமைச்சர்களின் துணைவியரான திருமதிகள் இராணி அண்ணா, தயாளு கருணாநிதி, பத்மாவதி கோவிந்தசாமி, தனலட்சுமி மாதவன், இராஜசுந்தரி மதியழகன் ஆகியோரும் ஈடுபட்டனர்.

மாவட்டச் செயலாளர் நீல நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்களான ம. பொ. சிவஞானம், எச். வி. ஹண்டே, இராம. அரங்கண்ணல், எம். ஆர். கண்ணன், மு. வேதாசலம், வி.எஸ். கோவிந்தராசன, மேயர் இரா. சம்பந்தன், துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் முன்னாள் மேயர்கள்—துணை மேயர்கள்—மாநகராட்சி உறுப்பினர்கள் ஆகிய அனைவரும் ஆங்காங்கு துப்புரவுப் பணியில் பங்கு பெற்றனர்.

அமைச்சர்களையும், மற்றும் தலைவர்களையும் ஆங்காங்கே பொதுமக்கள் மாலையணிவித்து வரவேற்றுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

சிவ சேனை :

காங்கிரசு கண்டித்த இலட்சணம் இதுதான்!

புதுடில்லியில் கூடிக் கலைந்த காங்கிரசு மேலிடம், 'சிவசேனை' இயக்கம் பற்றித் தீர்மானம் நிறைவேற்றியது!

அதன் அளவு ஒரு பத்தி! உள்ளடக்கிய வார்த்தைகளில் வழவழப்பு!

இதைவிட ஆச்சரியம் என்ன தெரியுமா?—தீர்மானம், சிவசேனை இயக்கத்தைப் பற்றிப் குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவிக்கவில்லை!

அது மட்டுமல்ல; 'சிவ சேனை' என்ற பெயரே குறிப்பிடப்படவில்லை!

'பிறப்பு—மதம் ஆகிய அடிப்படையில், வெறுப்பு—விரோதம் கூடாது' என்று, வழவழப்பாகத்தான் அத்தீர்மானத்தின் வாசகம் இருக்கிறது!

டி.டி.கே.-க்கு அடிக்கிறது யோகம்?

பிரிட்டனுக்குச் செல்வார் தூதுவராக!

ஒவ்வொருவராக வழியனுப்புகிறார் சி. சுப்பிரமணியம்

அண்மையில் ஓய்வு கருதி கொடைக்கானலில் வந்து தங்கிய தலைமையமைச்சர் இந்திரா காந்தி,

இங்கிலாந்துக்குத் தூதுவராகப் போக விருப்பமா?

என்று முன்னாள் நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரிடம் கேட்டுக்கொண்டிருப்பதாக பம்பாய்ப் பத்திரிகை ஒன்று யூகம் வெளியிட்டுள்ளது.

பதவி இழந்திருக்கும் முன்னாள் முக்கிய காங்கிரசு அமைச்சர்களில் ஒருவரான வெங்கட்ராமன், திட்டக் குழுவுக்குச் சென்றிருக்கிறார்!

டி. டி. கே. பற்றியும் இப்போது இப்படிப்பட்ட சூசகம் வெளியாகியிருக்கிறது.

எதிர்காலம் பற்றி எதுவும் தெரியாமல் சுப்பிரமணியம் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் செய்தி அடிபடுவதை வைத்துப் பார்த்தால், அடுத்தடுத்து அவருக்கு ஏமாற்றம் தரும் தகவல்களே வெளியாகின்றன என்று நம்புவதற்கு இடமிருக்கிறது!

மொழிப் பிரச்சினை :

குழப்புகிறது காங்கிரசு மேலிடம்- குழப்பப்படுகிறார்கள் மக்கள்!

எந்த உறுதிமொழி--எந்தத் தீர்மானம்?

'இனி எந்த நேரு?' என்ற கேள்வி பிறக்கலாம்

ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகளைப் படிப்பவர்களுக்கு ஞாயிறன்று வெளிவந்த செய்தித் தலைப்புகள், மயக்கத்தைக் கொடுத்திருக்கவே செய்யும்!

செய்திகளில் ஒன்றுக்கொன்று நேர் எதிர்மாறான தகவல்களை வெளிவரச் செய்து—பெரும் யானைகளையும் அடி சறுக்கச் செய்த 'பெருமை', புதுடில்லியில் நிருபர்களுக்கு விளக்கம் தந்திருக்கும் காங்கிரசுப் பொதுச்செயலாளர் சாதிக் அலிக்குப் போகிறது!

நேற்று மாலையில் வந்த 'மெயில்' இதழின் சிறப்புச் செய்தியாளரின் தெளிவுக்குப் பின்னர்தான், காலைச் செய்திகள் தந்த மயக்கம் தீர்ந்தது!

மொழிப் பிரச்சினையில், தனது 'பழைய தீர்மானத்தைச் செயற்குழு மீண்டும் வலியுறுத்தியது' என்ற தகவல் கிடைத்ததும், செய்தியாளர்கள் பிப்ரவரி 1965 தீர்மானத்தை மனத்தில்கொண்டு, 'நேருவின் உறுதிமொழி காப்பாற்றப் படும்; மொழித் திருத்த மசோதா அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் சட்டமாகும்' என்று தகவல்களைத் தந்தனர். ஆனால் நடந்திருக்கும் கதையோ வேறு!

ஆங்கிலம் ஆட்சி மொழியோ அல்லது துணை மொழியோ—காங்கிரசு மேலிடம், 'பழைய தீர்மானத்தை வலியுறுத்துகிறோம்' என்று முடிவு செய்திருப்பது, பிப்ரவரி 1965 தீர்மானத்தை அல்ல—

1965 சூன் 2 தீர்மானத்தையாம்!

அது வேறும்—இது வேறும்!

'1965 சூன் 2' தீர்மானம், நேருவின் உறுதி மொழியைப் பிரதிபலிக்கவில்லை!

1965 பிப்ரவரி தீர்மானம் தான், நேருவின் தீர்மானத்தை வலியுறுத்துகிறது!

ஞாயிறன்று காலையில் வெளிவந்த செய்தி, "காங்கிரசு மேலிடம், '1965 சூன் 2' தீர்மானத்தை வலியுறுத்தியிருக்கிறது" என்ற தவறான தகவலின் அடிப்படையில் வெளிவந்தது!

நேற்றைய மாலைச் செய்தியே மறுதகவலை தருகிறது—'காங்கிரசு வலியுறுத்தியது, '1965 பிப்ரவரி' தீர்மானத்தைத்தானே தவிர, '1965 சூன் 2' தீர்மானத்தை அல்ல என்று!

கடைசியாக வந்துள்ள செய்தியின்படி பார்த்தால், காங்கிரசு செயற்குழு வலியுறுத்தியிருக்கும் தீர்மானம் (1965 பிப்ரவரி), நேருவின் உறுதிமொழியை மத்திய அரசு நிறைவேற்றும்—செயலாக்கும் கட்டாயத்தை உள்ளடக்கவில்லை!

எஸ். ஆர்.

குழப்பம் இதில் மட்டும் இல்லை — இன்னொன்றிலும் இருக்கிறது!

'பிப்ரவரித் திங்கள் தீர்மானமோ—சூன் திங்கள் தீர்மானமோ—ஏதாவது இருந்து தொலைக்கட்டும்' என்று விட்டாலகூட, இந்திரா மற்றொரு குண்டைப் போட்டிருக்கிறார்!

"மொழி மசோதா என்னவோ சட்டமாக வேண்டியதுதான்; ஆனால், கட்சியில் 200 பேர் கொடுத்திருக்கும் மனு ஒன்றையும் கருத்தில் ஏற்கவேண்டியிருக்கிறதே"

என்று கூறியிருக்கிறார்!

அந்த 200 பாராளுமன்ற காங்கிரசு உறுப்பினர்களின் மனு என்ன தெரியுமா?—

"பிரச்சினையாக இருக்கும் மொழி மசோதாவை, வரிக்கு வரி—மூச்சுக்கு மூச்சு எதிர்க்கிறோம்"

என்பதுதான்!

இந்த மனுவைக் கூறித்தான், **'இதையும் தள்ளிவிடுவதற்கில்லையே—ஒதுக்கிவிட முடியவில்லையே' என்றிருக்கிறார் இந்திரா.**

தாலி கட்டும் நேரத்தில், 'மணப் பெண் யார்? எங்கே?' என்று கேட்பது போல், 'மொழி மசோதாவைச் சட்டமாக்குவதுபற்றி விவாதிக்கப் போகிறோம்' என்று கூறியவர்கள்,

'எந்த மசோதா? எப்படிப்பட்ட நோக்கம் கொண்டது?'

என்று குழம்பியிருக்கிறார்கள்—மக்களையும் குழப்பியிருக்கிறார்கள்!

நேருவின் உறுதிமொழி சட்டமாவதற்கு முன்னரே, இந்தப் பாடுபட்டிருக்கிறது!

இந்த அளவுக்குத் துணிந்தவர்கள்—தெளிவு இல்லாதவர்கள்—இனிவரும் நாட்களில்,

எந்த நேரு?

என்ற கேள்வியைக் கேட்டு குழப்பம் அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

மக்களைக் குழப்ப முயன்றாலும் அதிர்ச்சியடையத் தேவையில்லை!

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழகத்தின் சார்பாக வீர வரவேற்பு தரப்பட்டிருக்கும் அமைச்சர் மாதவன் செய்தியாளரிடையே,

"ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக ஆக்குவது பற்றிப் புதுடில்லி தீவிரமாக இல்லை"

எனக் கூறியிருப்பது, மேலே எடுத்து விளக்கப்பட்டிருக்கும் காங்கிரசு மேலிடத்தின் 'குழப்ப நிலை'யை மேலும் உறுதிப்படுத்துகிறது!

சீரணி தொண்டர்களுக்கு அறிவிப்பு

'27—8—67-ல் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற சீரணித் தொண்டர்கள் கூட்டத்தின் முடிவின்படி 5—9—67-ல் ஊரூர் உயர்நிலைப் பள்ளிக்காக வகுப்பறைகள் கட்டும் பணி ஆரம்பமாகிறது.

"இந்தப் பணியில் ஈடுபட ஒப்புதலளித்துள்ள சீரணியைச் சார்ந்த கொத்து வேலை செய்பவர்கள் — மேஸ்திரிகள் — பொறியியலாளர்கள் — மற்றும் பெயர் கொடுத்துள்ள தொண்டர்களும், 5—9—67 செவ்வாய் காலை 8-மணிக்கு மவுண்ட்ரோடு சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதிக்கு தவறாமல் வருகைதர வேண்டுகின்றேன்; தேதி வாரியாகப் பெயர் கொடுத்தவர்கள் அந்தந்தத் தேதிகளில் வருகை தரவேண்டும்"

என்று சீரணித் தனி அதிகாரி பரமசாமி கேட்டுக் கொள்கிறார்.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில்.

புதுடில்லி, செப். 2—

"குடிப் பழக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முடியாமல், கள்ளச்சாராயம் போன்றவற்றை குடித்து உடலைக் கெடுத்துக்கொள்ளாமல் தடுப்பதற்கு, குறைந்த அளவு போதை தரக்கூடிய மதுவகைகளை சில இடங்களில் விற்பனைக்கு அனுப்ப மகாராட்டிர அரசு முடிவு செய்திருக்கிறது" என்று முதலமைச்சர் வி. பி. நாயக் கூறினார்.

தமிழகம் சுற்றும் தமிழர்!

'பட்டால் தெரியும்' என்பார்கள் பெரியவர்கள்! எவ்வளவு உண்மை!

இல்லையென்றால், பக்தவத்சலம் துவக்கியிருப்பாரா பதினைந்து நாள் பயணத்தை?

எங்கே அவர், 'சினிமாப் பிரியராக மாறிவிட்டாரோ' என்று கூடச் சந்தேகமாக இருக்கிறது!

'டாக்டர் ஷிவாகோ'கூட, அவரது தலைமையில்தான் துவங்கியிருக்கிறது — 'எல்லோரும் கூட்டமாக வந்து பார்க்கவேண்டும்' என்று ஒப்புக்கு அல்ல— உண்மையாகவே சொல்லியிருக்கிறார் அப்போது!

அதற்கு முன்னால் எப்போதாவது **'உலகத்தைச் சுற்றிப் பதினெட்டு நாட்களில்'** என்ற படத்தைப் பார்த்தாரோ, என்னவோ? அல்லது, அது ஏற்கனவே புத்தகமாகப் பிரசித்தி பெற்ற கதைதான் — அதையாவது படித்திருப்பார்!

அதுவும் இல்லையென்றால், அதைப் போன்ற 'சீரியல்'கள் எத்தனையோ வந்தன; **'ஒன்பது நாட்களில் உலகைச் சுற்றி'— 'உலகம் முழுவதும் ஏழு நாட்களில்'**—இப்படிப்பட்ட வகைகளில் ஏதாவது ஒன்றை, தப்பித் தவறிப் பார்த்துத் தொலைத்திருப்பார் போலிருக்கிறது!

"சினிமாவாக எடுத்தால்தான் சுற்ற வேண்டுமா? புத்தகமாக எழுதுவதற்குத்தான் பயணம் புறப்பட வேண்டுமா? பொது மக்களை நான் பார்ப்பதற்கும், என்னைப் பொதுமக்கள் பார்ப்பதற்குமாக--இப்படி ஒரு யாத்திரை புறப்பட்டால் என்ன?" என்று முடிவு செய்திருக்கிறார், முன்னாள் முதலமைச்சர்!

எனவே, **'தமிழகம் சுற்றும் தமிழர்'** என்ற பட்டப் பெயருக்கும் உரியவராகிறார்! அடைமொழி விமர்சனத்துக்காகவோ, வேடிக்கைக்காகவோ தரப்பட்டதல்ல—இலக்கணப்படி தரப்படுவதுதான்! 'ஆகு பெயர்' என்றோ என்னவோ கூறுகிறார்களே—அப்படி அவருக்கு 'ஆகி வந்த' அடைமொழிதான் இது!

சுதந்தரத்துக்குப்பின் 'அண்டர் கிரவுண்டு' போன ஒரே மனிதர்—தவறு—அமைச்சர், இந்தப் பக்தவத்சலம்தான்; அதாவது, மவுண்ட் ரோடு சுரங்கப் பாதையைத் திறந்தாரே—அதனைத்தான் அந்தச் சமயத்தில், பத்திரிகைகள் அப்படி 'பாக்ஸ்' செய்திகள் போட்டுக் காட்டின!

அப்போதே இன்னும் ஒன்றையும் குறிப்பிட்டார்கள் அனைவரும்; அதாவது, 'சுதந்தரத்துக்குப் பின்னர்—ஏறத்தாழ இருபது ஆண்டுக் காலத்தில்—அவர் **'கால்'**, மவுண்ட்ரோடில் பட்டது அந்தச் சமயத்தில்தானாம்! அது வரையில் இத்தனைக் காலமும் அவரது **'கார்'**தான் பட்டது—

அதாவது
பாதை காணாத பாதங்கள்!

இப்படிப்பட்ட சிறப்புகளுக்கெல்லாம் உரியவர், '1967'-ல் பட்ட ஒரு பாட்டுக்காகப் பதினைந்து நாட்கள்—ஒரு நாளா, இரண்டு நாளா -- பதினைந்து நாட்கள் பயணம் புறப்பட்டிருக்கிறார் என்றால், ஏன் தரக்கூடாது—'தமிழகம் சுற்றும் தமிழர்' என்ற விருதை!

தலைப்பில் ஏதாவது தவறு இருக்கிறதா? தவறான கண்கொண்டுதான் எல்லாவற்றையும் பார்க்க வேண்டுமா? தமிழகத்தைச் சுற்றுகிறார் தமிழர்! 'வேறு எதைச் சுற்றுவார்' என்றோ, அல்லது 'இப்போதுதான் சுற்றுகிறாரா' என்றோ ஆராய்ந்து பார்த்தால்தானே, அனர்த்தங்கள் உண்டாகின்றன!

நாள், நட்சத்திரத்தில் நம்பிக்கை உடையவர்தான்; என்னவோ தெரியவில்லை—5-ந் தேதி செவ்வாய்க் கிழமையில், பயணத்தைத் துவக்கியிருக்கிறார்!

'செவ்வாயோ வெறும் வாயோ' என்பார்கள் — ஐதீகங்களில் பிடிப்புக் கொண்டவர்கள்!

ஒருவேளை பக்தவத்சலம், தேர்தல் பாடத்தினால் 'பகுத்தறிவுவாதி'யாகவும் மாறியிருந்தால், பரிந்து சென்று வரவேற்க வேண்டியதுதான்!

எனக்கு இருக்கிற ஒரே 'மயக்கம்' இதுதான்! மனிதர், புறப்பாட்டை முதன் முதல் 'பாண்டி'யிலிருந்தா வைத்துக் கொள்ள வேண்டும்? பரிதாபப்படுவதா? பாராட்டுவதா?

ஒருவேளை, "பாண்டியில்தானே 'நம்மவர்' ஆட்சி இருக்கிறது? ஒரு சுமூகமான—மனதுக்கு நிறைந்த 'பின்னணி'யுடன் புறப்படுவோமே" என்று இருக்கக்கூடும்!

அத்தோடு விட்டாரா இந்த அதிசய மனிதர்?

செவ்வாயன்று சென்னையிலிருந்து புறப்படுகிறார் பாருங்கள்—கிளம்பிப்போய், பாண்டிச்சேரியில் இரவு தங்கிவிடுகிறார்!

மறுநாள் காலையில்தான் நாகப்பட்டினம் புறப்படுகிறார்!

திருமணங்களில் ஒரு ஆத்திகப் பழக்கம் உண்டு; நேரம் சரியில்லையென்றால், மணமகனையோ மணமகளையோ முன் கூட்டியே வேறொரு இடத்தில் இருக்கச் செய்துவிடுவார்கள்; 'அப்புறப்படுத்துதல்' என்பார்கள் இந்தக் காரியத்தை!

அதைப்போல், 'முதன் முதலில் எதற்காகக் கழக வாடை வீசும் சென்னையிலிருந்து பயணத்தைத் துவங்குவானேன்?' என்று, காங்கிரசு 'வாடை' வீசும் பாண்டியிலிருந்து பதினைந்து நாள் புறப்பாட்டைத் துவக்குகிறார்!

நல்ல ஆரம்பந்தான்!

பாண்டிச்சேரியிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் அவருக்கு 1967 கொடுத்த 'மயக்கம்', 'தெளிவு' பிறக்க ஒரு சாதனமாக இருக்கட்டும்!

'வயிறு எரிகிறதா வாய் எரிகிறதா' என்று சந்தேகப்படும் வகையில்தான், **'விஷக் கிருமி தமிழகத்தைப் பிடித்துக்கொண்டது'** என்ற பழியைத் தூவிவிட்டு, 'தோற்றேன்' என ஒப்புக்கொண்டார்-தேர்தல் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்த போது!

'விஷக் கிருமி'கள் பரவல் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கப் புறப்பட்டிருக்கிறாரா அல்லது 'விஷத்தை'ப் பரப்பப் பயணம் மேற்கொண்டிருக்கிறாரா என்பதனை, பதினைந்து நாள் செய்திகள் சொல்ல இருக்கின்றன!

நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, கோவில்பட்டி, திருச்செந்தூர், விருதுநகர் என்று— அந்தக் காலத்து டூரிங் சினிமாக் கொட்டகைகளைப்போல் – பக்தவத்சலத்தின் பயணப் பட்டியல் இருக்கிறதே எனப் பார்க்க வேண்டாம்!

மீண்டும் மீண்டும் படியுங்கள்; எல்லாம் 'அரசியல் க்ஷேத்திரங்'கள்—வெறும் ஊர்களல்ல!

விருதுநகரிலிருந்து நேராகக் கோயமுத்தூர் போகிறார்!

அங்கே முக்கிய நிகழ்ச்சி என்ன தெரியுமா?—

'மாணவர்களைச் சந்தித்தல்'!

தமிழ்நாடு காங்கிரசின் அரைகுறை அதிகாரபூர்வமான ஏடான 'நவசக்தி'யில் போட்டிருந்த நிகழ்ச்சி நிரலை, கண்ணுக்கு அருகில் ஒருமுறை வைத்துப் பார்த்தேன் — 'மாணவர் காங்கிரசுப் பிரதிநிதிகளைச் சந்திப்பதாக இருக்கிறதா' என்று! இல்லை! மாணவர்களைத்தான் சந்திக்கிறாராம்!

'நம் நாடு' பேப்பரில், 'வாடையும் தென்றலும்' என்று—அன்று

அவர் மாணவர்களைப் போலீசையும் இராணுவத்தையும் வைத்துத் துரத்தியடித்ததையும், இன்று அண்ணா அவர்கள், அதே மாணவர் பிரதிநிதிகளை அழைத்துத் தலைமையமைச்சரின் முன்னால் பேச வைத்ததையும் ஒப்பிட்டுக் கட்டுரை எழுதியிருந்தார்கள். அதுதான் நினைவுக்கு வருகிறது—எனக்கு!

ஒருவேளை, பைபிள் கதையில் வரும், 'பிராடிகல்சன்'போல் —மனம் திருந்திய நிலையில் அவர்—மன்னிப்புக் கோரும் தோரணையில் மாணவர்களைச் சந்திக்கிறாரோ என்னவோ?

பின்னால், ஈரோட்டுக்கும் மதுரைக்கும் போய்விட்டுப் பட்டணம் திரும்புகிறார் — பதினெட்டாம் தேதி காலையில்!

நல்ல வேளையாக—'வரும்போதும் காங்கிரசு 'வாடை'யுடன் கிரகப் பிரவேசம் செய்வோமே' என்று —'பாண்டி' வழியாக சென்னை வரவில்லை!

வக்கீல்கள் — தொழிற் சங்கத் தலைவர்கள்— தாழ்த்தப்பட்டவர்கள்—நகரசபைத் தலைவர்கள்— இப்படிப் பலதரப்பட்ட 'தமிழர்'களைச் சந்திக்க இருக்கிறார்— 'தமிழகம்' முழுவதிலும்!

அது மட்டுமா? ஆச்சரியம் இன்னும் இருக்கிறது—வாருங்கள்!

காங்கிரசுக்காரர்களையும் சந்திக்கப் போகிறார்! 'வேறு எதற்காகப் போகிறார்' என்று பதிலுக்குக் கேட்கிறீர்களா?

காங்கிரசுக்காரர்கள் என்றால், எத்தனையோ காங்கிரசுக்காரர்கள் இருக்கிறார்களல்லவா?— அத்தனைப் பேரையும் சந்திக்கப் போகிறார்!

இளைஞர் காங்கிரசு —
பிரமுகர் காங்கிரசு —
ஊழியர் காங்கிரசு —
முக்கியஸ்தர் காங்கிரசு.

'இது என்ன—'ஈஸ்ட்மென்' கலர் காங்கிரசு' என்று ஆச்சரியப்பட வேண்டாம்!

இத்தனைவகைக் காங்கிரசுக்காரர்கள் இருப்பதாக அதிகாரபூர்வமாக வெளியாகியிருந்த பட்டியலைப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன்!

கம்யூனிசத் தத்துவங்களில் அடிக்கடி அடிபடும் அல்லவா—'வர்க்கப் பேதம்' என்ற வார்த்தை— அதைப்போல், காங்கிரசில் உள்ள வர்க்கங்கள் இத்தனை வகையினரும்!

பரமசிவனையும் —பார்வதியையும் சுற்றிவந்துவிட்டு, உலகத்தையே சுற்றியதாகச் சொல்லி முருகன் ஏமாற—ஞானப் பழத்தைத் தட்டிப் பறித்த கடவுளின் பெயரைக் கொண்டிருக்கும் சென்னை நகராட்சி காங்கிரசுத் தலைவர் விநாயகமூர்த்தியையும் உடன் அழைத்துச் செல்கிறாராம் பக்தவத்சலம்!

அந்தக் கதையில் வரும் தந்திரத்தைப் போலல்லாமல், பக்தவத்சலம், 'தமிழகம் எப்படி இருக்கிறது' என்பதை உண்மையாகவே சுற்றிப் பார்த்து விட்டு வருவாராக—என வாழ்த்தி அனுப்புவோம்!

முன்பு சுப்பிரமணியம் சுற்றி வந்தது பற்றி, முன்கூட்டி இப்படிப்பட்ட அறிவிப்பு இல்லை; இருந்திருந்தால், 'தமிழகம் சுற்றிய தமிழர்' என்ற தலைப்பில் அவரது பயணம் பற்றியும் சில சொல்லியிருக்கலாம்.

பரவாயில்லை; பக்தவத்சலத்துக்கு அடுத்தாற்போல் காமராசர், ஒரு பயணம் போகப் போகிறாராம்!

'தமிழகம் சுற்றும் தமிழர்கள்' இனி, காங்கிரசிலிருந்து பெரும் அளவில் புறப்படுவார்கள்! அவர்களை அவ்வப்போது அறிமுகப்படுத்துவோம்!

—எஸ். ஆர்.

'போணி' ஆகவில்லை!

வெண்புறு என்றார்கள்; சேனை என்றார்கள்; ஊருக்குப் பணி புரியும் 'உத்தமர்'களைக் கொண்டு துவக்கப்படுகிறது என்றார்கள்!

'புல்லரை மாய்த்திடப் புறப்படும்' என்றார்கள்!

நாளொன்று குறித்தார்கள்—விழாவொன்று எடுத்தார்கள்!

அமைப்பை விளக்கினார்கள்! இலட்சியத்தை முழக்கினார்கள்!

சேனையில் சேர விரும்புவோர் அங்கேயே -- அப்போதே சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் விளம்பரம் செய்தார்கள!

'சேனாநாயக'ரை நியமித்தும் பார்த்தார்கள்!

இத்தனைக்கும் பிறகும்

20 இலட்சம் மக்கள் கொண்ட இந்தச் சென்னை மாநகரில் ஈராயிரம் பேரை இந்தச் சேனைக்கு ஈர்க்க முடியவில்லை!

ஆட்கள் இல்லாமல், வெறும் பரிசுப் பொருள்களை மட்டுமே வைத்துக்கொண்டு சேனை துவக்கிவிட்ட 'துக்ளக்'குகள், வழக்கம்போல், ஆட்களுக்கு அலைகிறார்கள்!

நித்த நித்தம் விளம்பரம் செய்கிறார்கள்—'விண்ணப்பத்தாள் இன்னின்னாரிடம் கிடைக்கும்' என்பதாக!

புரிகிறது, கதை! 'அவர்கள் மொழி'யில் சொன்னால், 'போணி ஆகவில்லை!'

'ஏழை மக்கள் வாழ்வே எமது முதல் இலட்சியம்'

'சோற்றுப் பிரச்சினை தீர்ந்தால் தொழில் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தலாம்'

"புதிய கட்சி இம்மாநிலத்தில் ஆட்சிக்கு வந்தது பற்றிச் சொல்லப்பட்டது. இந்த வசீகரமெல்லாம் சில மாதங்கள்தான்; நாளடைவில் இந்த வசீகரம் குறைந்துவிடும்; வரலாற்றின் நாளேட்டில்— நெடுங்காலத்திற்குப் பிறகு இது—மங்கியதொரு தாளாகிவிடும்!

"புதிய கட்சி என்பதால், எவரும் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை!

"இந்த அரசும் இதை நடத்திச் செல்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் தனது மக்கள் நலப் பணியில் உங்களது ஆதரவினை நாடுகின்றன. மக்களுக்கு மூன்று வேளை சோறுவது அவர்கள் திருப்தியடையும் வகையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் நோக்கம்!

"பொருளாதார இலாப—நட்டப் புள்ளிவிவரப் பட்டியல், மக்களுக்குப் புரியாதது!

"எனவே சாதாரண மக்கள், 'முன்னைவிட வலிவுடன் இருக்கிறோம்; உடல் நலமுடன் இருக்கிறோம்' என்ற உள்ள நிறைவோடு இருக்கத்தக்க வகையில் பணிகள் நடைபெற உங்களையொத்தவர்களது ஒத்துழைப்பு இருக்குமென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு."

விளைந்த பலன் எதிர்பார்த்தபடி இல்லை

"பொருள் உற்பத்தி செழிக்க உள்நாட்டு மார்க்கெட் வலிவானதாக இருக்கவேண்டும்; மக்களிடம் வாங்கும் சக்தி வளர வேண்டும்; அது வளராமல், பொருள் உற்பத்தி மட்டும் பெருகுவதால் அதன் முழுப்பலனையும் அடைய இயலாது.

"ஐந்தாண்டுத் திட்டங்கள் நல்ல நோக்கத்துடன் கூடியவைகளே; ஆனால், அவற்றினால் விளைந்த பலன்கள் நாம் எதிர்பார்த்தபடி இல்லை.

"திட்ட இலக்குகளுக்கும் அசல் சாதனைகளுக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. அரசியல் மேடைகளைப் பார்த்தால் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை மட்டும் பட்டியல் போட்டுக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்வார்கள்; அசல் சாதனைகள் இன்னதென்று சொல்ல அஞ்சுவார்கள்!

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டமாகிலும் வேறுபட்டு இருக்குமென்று எதிர்பார்ப்போம்!"

புத்துயிர்பெறும்-- புதுவலிவு பெறும்

"எந்தத் திட்டமாயினும் விவசாயத்தைப் பலமுடையதாகச் செய்யக் கூடியதாகவே அமைய வேண்டும்; இது அனைவராலும் இப்போது ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டது. இவ்வாறு விவசாயத்தைப் பலப்படுத்துவோமானால் இந்நாட்டுப் பொருளாதாரம் புத்துயிர் பெறும்—புதுவலிவு பெறும்.

"விரைவான நற்பலன்களைக் கொடுக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ப

(4-ம் பக்கம் பார்க்க)

இரண்டு வயதான நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

இனியேனும் 'சாத்தியக் கூறு'களை ஊன்றிக் கவனிக்குமா?

புதிய திட்டக்குழு--முதலமைச்சர் அண்ணாவின் நம்பிக்கை கலந்த வரவேற்பு

"திட்டத்தின் இலக்குக்கும்—நாட்டில் ஏற்பட்டிருக்கும் விளைவுகளுக்கும் இடையில் பெரிய இடைவெளியே இருக்கிறது!

"இத்தனைத் திட்டங்களுக்குப் பின்னரும், நாட்டில், பலன் என்ன என்பதை எண்ணிப் பார்த்தால், திகைப்புதான் மேலிடுகிறது!

"நடைமுறைகளில் உள்ள 'ஓட்டை'கள், திட்டங்கள் அமுலாவதைத் தோல்விப் பாதைக்கு இழுத்துச் செல்கின்றன!

"காட்கில் போன்ற திறமையாளர்களைக் கொண்டு திட்டக் குழு திருத்தியமைக்கப்பட்டு வருகிறது; அதில், நமது திறமைசாலியான வெங்கட்ராமனும் இருக்கிறார்.

"இரண்டு ஆண்டுகளை முடித்திருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வடிவம் என்ன என்பது இன்னும் விளங்கவில்லை!

"திட்டக் குழுவின் புதிய அமைப்பாவது, இனி சாத்தியக்கூறுகளில் கவனம் செலுத்தும் என்று நம்புவோம்!"

(தென்னிந்திய வணிகக் கழக ஆண்டு விழாவில்)

நகராட்சித் தேர்தல்

தமிழக அரசு முடிவு

சென்னை, ஆக. 31—

தமிழ் நாட்டில் நகராட்சிமன்றங்களுக்கான தேர்தலை 1968 பிப்ரவரித் திங்களில் நடத்தத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இத்தகவலை, இன்று அமைச்சரவைக் கூட்டம் முடிந்ததும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அறிவித்தார்.

பிப்ரவரித் திங்களுக்குள் வார்டுகள் பிரிக்கும் வேலை முடிந்துவிடும் என்று நம்புவதாக அண்ணா சொன்னார்.

நகராட்சிகளில் மகளிர் பிரதிநிதிகளும், தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிக்குமான இரட்டைத் தொகுதிகளை இப்போதுள்ளபடியே நீடித்து வைத்துக்கொள்வதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

சென்னை மாநகராட்சி, தனிச் சட்டத்தின்கீழ் வருவதால், அதற்கு இந்த முடிவு பொருந்தாது; எனவே மாநகராட்சியைப் பொறுத்து என்ன செய்வதென்று பிறகு அமைச்சரவை முடிவு செய்யும்.

தமிழகத்தில் மொத்தம் 84 நகராட்சி மன்றங்களும், 4 நகரியங்களும் (டவுன்ஷிப்) உள்ளன. அவற்றில் ஏற்கனவேயுள்ள நகராட்சிகள் 64; புதிதாக ஏற்பட்டவை 20.

ரூ. 30 இலட்சத்துக்குக் கணக்கு எங்கே?

முதலமைச்சர்மீது முன்னாள் காங்கிரசுக்காரர் குற்றச்சாட்டு

ஆந்திரக் காங்கிரசில் கோஷ்டிப் பூசல்--கொள்கைப் பிளவு!

"முதலமைச்சர்மீது எங்களுக்குத் தனிப்பட்ட வெறுப்பு ஏதும் கிடையாது. அவருக்குக்கீழ் உள்ள சில அமைச்சர்களின் தவறுகளைத்தான் நாங்கள் கண்டிக்க விரும்புகிறோம்"

என்று ஆந்திரக் காங்கிரசிலிருந்து வெளியேறியவர்களின் தலைவரான வெங்கல்ராவ் என்னும் சட்டமன்ற உறுப்பினர், ஐதராபாத் நகரில் கூறியுள்ளார். ஆந்திரக் காங்கிரசு நிலைமைகள் பற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"கட்சி சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளை மாநிலக் காங்கிரசு மேலிடத்தின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும்; கட்சியின் நிதியில் முப்பது இலட்சம் ரூபாய்க்கான கணக்குகள் இல்லை—சந்தேகத்துக்கு இடம் இருக்கிறது."

வெங்கல்ராவின் தலைமையின்கீழ் விலகியிருப்பவர்கள் ஆந்திராவின் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்துவருகின்றனர்.

தங்கள் கட்சியின் நிர்வாகக் குறைகள் பற்றியும், அமைச்சர்களின் தவறுகள் பற்றியும், கோஷ்டி நிலைமைகள் பற்றியும் அவர்கள் கண்டித்துப் பேசிவருகின்றனர்.

வீரப்பன்சத்திரம் பேரூராட்சி

வள்ளுவர் படம் திறக்கத் தீர்மானம்

வீரப்பன்சத்திரம் பேரூராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 30—8—67 அன்று மன்றத் தலைவர் திரு. எம். இராமசாமி தலைமையில் நடைபெற்றது; அதுபோது, துணைத் தலைவர் வீ.கே. மாரிமுத்து கொண்டுவந்த கீழ்க் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

ஈரோடு நகராட்சியின் எல்லையை ஒட்டியுள்ள வீரப்பன்சத்திரம் நகர ஊராட்சி எல்லைக்குள் அடங்கிய கிருஷ்ணம்பாளையம், வைராபாளையம், வீரப்பன்சத்திரம், பெரியவலசு ஆகிய ஊர்களை ஈரோடு நகராட்சி எல்லையுடன் சேர்த்துக்கொள்ளவும், மீதியுள்ள நாராயணவலசு, குமலன்குட்டை, வெட்டுக்காட்டுவலசு, வீரப்பம்பாளையம், சின்னசெங்கோட்டன் பாளையம் ஆகிய ஊர்களைத் தனி ஊராட்சியாக அமைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அரசையும் ஈரோடு நகராட்சியையும் இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது.

பேரூராட்சி அலுவலகக் கூட்ட மன்றத்தில் உலகப் பொதுமறையாம் குறள் தந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்தை வைக்க முடிவு செய்கிறது.

பேரூராட்சி அலுவலகக் கூட்ட மன்றத்தில், மன்றத் தலைவர் திரு. எம். இராமசாமி அவர்களின் உருவப்படத்தை வைக்க முடிவு செய்கிறது.

கடைநிலை ஊழியர், சுகாதார மேஸ்திரி, இரவு காவலர், சுகாதாரம் பணியாளர்கள் ஆகியோருக்குச் சீருடைகள்—மிதியடிகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம் திருப்பராய்துறையிலுள்ள இராமகிருஷ்ண குடிலுக்கு ரூ. 50 நன்கொடை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

கண்ணனூரில் தீவிபத்து

பாதிக்கப்பட்டோருக்குக் கழகத் தோழர்கள் உதவி

சமயபுரம்—கண்ணனூர் அருகிலுள்ள இனுப் சமயபுரம் கிராமத்தில், 21—8—67 பகல் 11 மணிக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குடியிருக்கும் பகுதியில் தீவிவத்து ஏற்பட்டது.

சமயபுரம்—கண்ணனூர் தி.மு. கழகத் தோழர்கள் விரைந்து தீயணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு தீயணைக்கும் படையினரின் உதவியோடு ஒரு சில பகுதிகளைக் காப்பாற்றினர்.

தீயினால் பாதிக்கப்பட்ட 95 குடும்பங்களுக்கு நிவாரணம்அளிக்கும் முயற்சியில் கழகத் தோழர்கள் ஈடுபட்டு கடந்த 25—8—67-ல் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3 லிட்டர் அரிசியும், 75 காசும் உதவினர்.

அந்தியூர் பேரூராட்சி இடைத் தேர்தல்

கோவை மாவட்டம் அந்தியூர் பேரூராட்சி மன்றத்திற்கு 28-வது வார்டில் நடைபெற்ற இடைத் தேர்தலில், கழகத் தோழர் ஈ. பொன்னுசாமி, காங்கிரசுக் காரரைவிட 203 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்தார்.

தி. மா. மு. க. பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிடத்தின் கலை, மொழி, இலக்கியம் பண்பாடு ஆகியவற்றுக்கு ஊறு நேர்ந்தால் சீறியெழுந்து அவற்றைக் கண்ணேபோல் கருதி, பொன்னேபோல் பேணிக் காப்பதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய கண்காணிப்போடும் தூய நோக்குடனும் தோற்றுவிக்கப்பட்ட நம் கழகம், கடந்த பல்லாண்டுகளாக ஆற்றிய அரும்பணிகள் ஏராளம்.

குறிப்பாக, 1965-ம் ஆண்டில் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதும், அண்மையில் முடிந்த 1967 பொதுத் தேர்தலின்போதும் நம் மாணவர்கள் அனைவரும் பாராட்டிப் புகழும்வண்ணம் செயல்பட்டதை எவரும் மறக்க இயலாது—வரலாறும் மறவாது!

அரசியலில் நேரடி ஈடுபாடு கொள்ளாமல்—தங்களின் படிப்பும் கெடாமல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும், பொதுத் தேர்தலிலும் தங்களின் கடமையைச் செவ்வனே நிறைவேற்றிய அத்தனை மாணவர்கட்கும் என்னுடைய பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் கடமை முடிந்துவிடவில்லை; நம் கலை — மொழி — இலக்கியம்—பண்பாடு ஆகியவற்றின் உயர்வுக்காக நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள; ஆகவே, நம் அமைப்புகளைப் புதுப்பிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

கல்லூரிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாளையும் கழக விதிமுறைகளையும்,

பொதுச்செயலாளர்,
16-A, ஜூபிலி ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-33

என்ற முகவரிக்கு எழுதிப் பெற்று உறுப்பினர் சேர்க்கும் பணியினைத் துரிதமாகச் செய்யும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

எஸ். டி. சோமசுந்தரம்
பொதுச்செயலாளர்,
தி. மா. மு. க.

அறிஞர் அண்ணா பிறந்த மண்ணில் அண்ணா உருவச் சிலை

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி திறந்துவைக்கிறார்

காஞ்சி, ஆக. 31—

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊரான காஞ்சியில், அண்ணா அவர்களுக்கு உருவச் சிலை அமைத்துப் பெருமைப்படவிருக்கிறது காஞ்சி நகராட்சி மன்றம்.

அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள், காஞ்சி நகராட்சி மன்றத்திற்கு அருகில் அண்ணா அவர்களின் வெண்கல உருவச் சிலை நிறுவி, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களைக்கொண்டு திறந்துவைப்பதென, நகராட்சித் தலைவர் திரு. அ. க. தங்கவேலர் தலைமையில் கூடிய நகராட்சி மன்றம் முடிவு செய்தது.

அண்ணா உருவச் சிலையைத் திறக்க வருகைதரும் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களுக்கு, வரவேற்பு மடல் படித்தளிக்கவும் காஞ்சி நகராட்சி முடிவு செய்துள்ளது.

'அவசர முடிவால் நம் சந்ததிக்கே இழப்பு ஏற்படும்'

இந்தி வெறியர்களுக்கு தமிழக ஆளுநர் எச்சரிக்கை

சென்னை, ஆக. 31—

"இந்தியாவின் உயர்தரக் கல்விக்கு ஆங்கிலமே தொடர்ந்து பயிற்று மொழியாக இருக்கவேண்டும். ஆங்கிலத்தைக் கைவிடுவதென்று அவசரப்பட்டு முடிவு செய்வது, நாமும், அடுத்துவரும் தலைமுறையினரும் அறிவுச் செல்வத்தை இழப்பதாகும்"

என்று, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் கருத்தறிவித்துள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் ஆற்றிய உரையில், மொழி பற்றி மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலத்தைக் கைவிடுவது என்பது நாட்டின் முன்னேற்றத்துக்கோ, ஒருமைப்பாட்டுக்கோ உகந்ததாகாது.

கல்வி பெருகவேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறை உண்டு. அந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது, உயர்தரக் கல்விக்குத் தொடர்ந்து ஆங்கிலத்தையே பயிற்று மொழியாக வைத்துக்கொள்வது அனைத்து நாட்டு நிகழ்ச்சிகளை நன்கு புரிந்துகொள்வதற்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிகவும் துணை செய்யும் என்று நம்புகிறேன். குறிப்பாக அறிவியல்—தொழில்நுட்பத் துறைகளில் புதுப் புதுக் கண்டுபிடிப்புகளைத் தெரிந்துகொள்ள அது உதவியாய் இருக்கும்.

இன்று எப்பக்கம் நோக்கினும் மலைக்கத்தக்க சாதனைகளைக் காண்கிறோம். 'ஒரே உலகம்' என்ற வழியில்தான் இவையெல்லாம் நம்மை அழைத்துச் செல்கின்றன!

இவ்வளவு காலமாக நாம் பயன்படுத்திவந்த உலக மொழியை நாம் தொடர்ந்து வைத்துக் கொள்வதால் நன்மைதான் கிட்டுமேயன்றி தீமை ஏற்படாது."

அப்பன்கோயில் ஊராட்சி இடைத் தேர்தல்

கழகத் தோழர் வெற்றி

நெல்லை மாவட்டம் அப்பன் கோவில் ஊராட்சி மன்றத்திற்கு 25—8—67 அன்று நடைபெற்ற இடைத் தேர்தலில் நேரடிப் போட்டி ஏற்பட்டது.

சிவராமங்கலம் தி.மு.க. செயலாளர் எஸ்.எஸ். இராமசாமியும் இன்னொருவரும் போட்டியிட்டனர்; இருவருக்கும் சமமான வாக்குகள் (78) கிடைத்தன; ஒரு வாக்கு செல்லாமற்போய்விட்டது. மொத்தம் 157 வாக்குகள் பதிவாயின.

திருவுளச் சீட்டு குலுக்கியதில் தோழர் எஸ்.எஸ். இராமசாமி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

கிள்ளை ஊராட்சி இடைத் தேர்தல்

வெற்றி பெற்ற மூவரும் கழகத் தோழர்கள்

18—8—67 அன்று நடைபெற்ற கிள்ளை ஊராட்சி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர்கள் பி. ஆறுமுகம், ஆர். கன்னையன், டி. அருணகிரி ஆகிய மூவரும் வெற்றி பெற்றனர்.

எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்ற மூவரும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு ஊழியர் சங்கம்

திருச்சி மாவட்ட நூலக ஆணைக் குழு ஊழியர்கள் சங்க அமைப்புக் கூட்டம், நூலக ஆணைக் குழுத் தலைவர் டாக்டர் வி. கே. ரங்கநாதன் தலைமையில் மத்திய நூலகத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் அவசியம் பற்றி ஜி. டி. இராசகோபால், ஆர். நாகராசன், ஜே. அமீர்கான், எஸ். கலியன், வி. மாதவராவ், டி. கலிபுல்லா ஆகியோர் பேசினர்.

சங்க நிர்வாகிகள் வருமாறு:— தலைவர்: ஜி. டி. இராசகோபால்; துணைத் தலைவர்: டி. கலிபுல்லா; செயலாளர்: எஸ். கலியன்; துணைச் செயலாளர்: என். சிங்கராயன்; பொருள் காப்பாளர்கள்: வி. மோகன தாசு, முருகேசன்; செயற்குழு உறுப்பினர்கள்: பி. கந்தசாமி, எல். இராமமூர்த்தி, ஏ. மருதை, வி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். பாலசுப்பிரமணியன், என். சங்கரன்.

இனி இந்தி இங்கே நுழையவிடோம்!

அதனைத் தடுத்து நிறுத்த ஓர் அரசே இருக்கிறது

துடித்து நிற்கும் மாணவப் பட்டாளத்துக்கு அமைச்சர் கருணாநிதி தரும் நம்பிக்கை

சென்னை, ஆக. 4—

"மாணவர் திலகங்களே! தாயகத்து மொழிப் பிரச்சினையை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்; அது உங்கள் கையில் இருக்க வேண்டாம்.

"ஆறு மாதத்துக்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தது. அப்போது நமக்காக வாதிட ஒரு நல்லரசு இல்லை; 'ஐயோ! இந்தியைத் திணிக்கிறார்களே! கேட்பவர் யாருமில்லையே!' என்ற ஏக்கத்தில் நீங்கள் எல்லாம் போர் முரசு கொட்டினீர்கள்!

'இப்போது, உங்கள் சார்பில் போர் முரசு கொட்ட ஓர் அரசே இருக்கிறது. அதன் அடையாளச் சின்னம் தான் டெல்லிப் பட்டணத்தில் அமைச்சர் மாதவன் செய்த முழக்கம்!

"ஆகவே, தமிழக அரசு மொழிப் பிரச்சினையில் எத்தகைய துணிவுடன் காரியம் செய்யும் என்பதை மறந்துவிடக் கூடாது"

என்று தி.மு. கழகப் பொருளாளரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான மு. கருணாநிதி அவர்கள் நேற்று சென்னை கோகலே மன்றத்தில் பேசுகையில் கூறினார்.

தென்னகப் பல்கலைக் குழுவின் சார்பில் கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களால் இயற்றப்பட்டு—நன்னிலம் சதாசிவம் -- மோகனா குழுவினரால் பாடி அரங்கேற்றப்பட்ட கலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில்தான் அவர் அப்படிக் குறிப்பிட்டார்.

கலை நிகழ்ச்சியைத் தயாரித்த தென்னகப் பல்கலைக் குழு கவிஞர் சுப்பு ஆறுமுகம், நன்னிலம் சதாசிவம்—மோகனா ஆகியோரைப் பாராட்டியபின் நிகழ்ச்சி பற்றி அவர் குறிப்பிட்டதாவது :—

"ஆரம்பமே நல்ல வெற்றிகரமான ஆரம்பம் என்று சொல்லத்தக்க அளவில்,ஒவ்வொரு கட்டத்திலும் கூடியிருக்கும் நீங்கள், ஆரவாரம் மூலம் உங்கள் ஆதரவைத் தெரிவித்தீர்கள்.

பெரியதொரு புலிவேட்டைக்குப் போய்க்கொண்டிருக்கையில், இடையில் ஓடிக்கொண்டிருக்கும் முயல்களைப் பார்த்துவிட்டு, முயல்வேட்டையில் நாம் நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளக் கூடாது! நம்முடைய குறிக்கோள் — இலட்சியம் என்ன என்பதில் கவனமாக இருக்க வேண்டும்!

முன்னாள் அமைச்சர்கள் கழக ஆட்சியைக் குறைசொல்லும் பொழுது, அவர்கள் பொறுப்பில் இருந்தவர்கள்—இப்போதும் பொறுப்பான நிலையில் உள்ளவர்கள் என்பதால்—அவற்றைக் கருத்துடன் கேட்டுப் பதில் சொல்ல வேண்டும்; ஆனால், தேவையற்றவர்களின் கண்டனங்களுக்குப் பதில் சொல்ல வேண்டாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து வசைமொழி பேசுகிற ஒரு சிலரின் முதல் பேச்சு அல்லது இரண்டாம் பேச்சு–எழுதுகிறவரின் முதல் எழுத்து அல்லது இரண்டாம் எழுத்து — இவற்றை மட்டுந்தான் மக்கள் ஆர்வத்துடன் கேட்பார்கள்; அதற்குப்பின்னால், 'இந்த அரசு தங்கள் அரசு; இந்த அரசு செய்யும் காரியங்கள் தங்கள் காரியங்கள்' என்று உணருகிறார்கள்; எனவே அதற்குத்தக்கவாறு இந்த நிகழ்ச்சி அமையட்டும்"

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"நான் தமிழகச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, அப்போதைய முதலமைச்சர் பக்தவத்சலம், மொழிப் பிரச்சினை பற்றி விவாதிக்க டில்லிக்குச் சென்றார்; போகுமுன், நான் அவரிடம் சட்டமன்றத்தில் சொன்னேன்—"தமிழகத்தின் உரிமைக் குரலை டில்லிப் பட்டணத்தில் உரக்கச் சொல்லுங்கள்: தமிழ் மக்களின் கொந்தளிக்கும் உள்ளத்தை உள்ளபடி படம் பிடித்துக் காட்டுங்கள்; 'இந்தியை நாங்கள் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்; எங்கள்மீது அதனைத் திணிக்காதீர்கள்' என்று உறுதியோடு சொல்லிவிட்டு வாருங்கள்; உங்களுக்கு நாங்கள் இங்கே வீர வரவேற்புத் தருகிறோம்; **என் கை எலும்பை எடுத்து உங்களுக்குச் சிலை செய்து வைக்கிறேன்**" என்றேன். என்னுடைய இந்தப் பேச்சு சட்டமன்ற நிகழ்ச்சியில் இன்றும் இருக்கிறது—இன்னம் எரிக்கப்படவில்லை!

ஆனால் பக்தவத்சலம் டில்லி சென்றார்; அங்கே இருந்தவர்கள், 'இந்தி வரும்; மறைமுகமாகவும் வரும்—நேரடியாகவும் வரும்' என்று பேசினார்கள்.

அவர்கள் பேசியது இவருக்குக் கேட்டது! தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொண்டார்; 'நாம் இங்கே எதிர்த்து மூச்சுவிட்டால், சென்னைக் கோட்டையிலே இருக்கிற இதேபோன்ற நம் நாற்காலி போய் விடுமே' என்ற அச்சம் வந்துவிட்டது! பேசாமல் இருந்துவிட்டார்!

ஆனால் இப்போதோ......சின்னஞ்சிறு உருவம் -- ஆனால் சிங்கக் குரல் எழுப்பிவிட்டுத் தமிழகம் திரும்பி வருகிறார் மாதவன்! இதையும் எண்ணிப் பாருங்கள்!

"மாணவர்களே! மொழி ஆர்வத்தால் துடித்து நிற்கும் மக்களே! நாங்கள் எங்கள் ஆயுதத்தை இழந்துவிட்டால்—நாங்கள் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டுவிட்டால்—அதற்குப் பிறகு வேண்டுமானால், இந்திப் பிரச்சினையில் நீங்கள் தலையிட்டு ஒரு கை பாருங்கள்! அதுவரை பொறுமையாக இருங்கள்! பொறுப்புகளை எங்களிடம் ஒப்படைத்துவிடுங்கள்"

என்று தமிழ்ச் சமுதாயத்துக்கு அறிஞர் அண்ணா அவர்களின் சார்பில் எடுத்துக் கூறுகிறேன்.

எங்கள்மீது நம்பிக்கை வைத்துப் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுப் பொறுமையாக இருங்கள்!

தொட்டிலிலே குழந்தை படுத்திருக்கத் தாய் பக்கத்தில் நிற்கும்போது பாம்பு ஒன்று வருமானால், தாய் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டாள்! பதறித் துடித்துப் பாம்பை அடித்துக் குழந்தையைக் காப்பாற்றுவாள்!

அதுபோலவேதான், இந்திப் பாம்பு தமிழ்க் குழந்தையைத் தீண்ட வரும்போது இந்த அரசு உறுதியோடு இருந்து, தமிழைக் காப்பாற்றும்! இந்த உறுதியைத்தான் இந்த நேரத்தில் நான் அளிக்க விரும்புகிறேன்!

இந்த நிகழ்ச்சியில் அண்ணாவின் சாதனைகளைப் பற்றிச் சொன்னீர்கள். அண்ணாவின் அரசு சாதிக்க எண்ணி—மத்திய அரசின் குறுக்கீட்டால் - வேறு பல நிலைமைகளால் சாதிக்க முடியாமல் இருக்கிறவற்றையும் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

"செய்ய எவ்வளவோ இருக்கிறது; எவ்வளவோ செய்ய நினைக்கிறேன்; ஆனால், செய்யத்தான் முடியவில்லை" என்று அண்ணா மனந்திறந்து சொல்கிறார்கள்!

முன்பு இருந்தவர்களோ, 'எவ்வளவோ செய்திருக்கிறோமே' என்பார்கள்!

இப்படிப்பட்டவற்றை உங்கள் நிகழ்ச்சிகளில் சேர்க்க வேண்டும்.

ஆனால் இவையெல்லாம், உசுப்பி விடுகிற வகையில் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டாம்.

ஏன் என்றால், 'கட்டளை இடும் கரம் எது? உத்தரவிட வேண்டிய கை யாருடையது? ஆணையிடவேண்டிய உரிமை யாருக்கு உண்டு? அசைக்க வேண்டிய தலைமை எது?' என்பதெல்லாம் நமக்குத் தெரியும்!

சென்னை - நுங்கம்பாக்கம் அவினியூ ரோடில், 9-ம் எண்ணுள்ள இல்லத்தில் ஆணையிட வேண்டிய அவர் இருக்கிறார்! அந்த இடத்திலே அவர் இருப்பதாய்க் கூறினாலும், 4 கோடித் தமிழரின் இதயங்களிலும் அவர் இருந்துகொண்டிருக்கிறார்!

கட்டளைகளை அங்கிருந்து பெறுவோம்! ஆணைகளை அவர் வாயால் கேட்போம்! உத்தரவுகளை அவரிடமிருந்து பெறுவோமாக!"

புத்துயிர் பெறும் --- புதுவலிவு பெறும்

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

"இவ்வகையில் மின்உற்பத்தியை அதிகரிப்பதிலும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு இப்போது தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

"இத்தகைய உடனடிப் பலன்களை அளிக்கக்கூடிய திட்டங்களுக்காகவே தமிழக அரசு கடன் எழுப்பியுள்ளது. இக்கடனுக்குத் தாராளமாகக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

"உணவைப் பொறுத்தமட்டில் நாம், 'உபரி மாநிலம்' என்ற நிலையை அடைந்துவிடுவோமானால் நமது மாநிலம், தொழில் வளத்தை நோக்கி முன்னேற அதுவே ஓர் உந்து கோலாக அமையும்!"

--அறிஞர் அண்ணா

(தென்னிந்திய வணிகக் கழகத்தின் 57-வது ஆண்டுத் துவக்கவிழாவில்)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

5--9--67

கன்னிவாடி

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு, சவகர் திடலில்; தலைவர்: இரா. சோலைமுத்து, பேசுவோர்: ஆ. திராவிடமணி, வி. எஸ். எஸ். மணி எம். எல். ஏ., மு. காதர்சா பி.ஏ., க. அங்குச்சாமி, தி. ச. முத்துச்சாமி, ப. காத்தமுத்து, மா, இராமசாமி.

காஞ்சி மணிமொழியாருக்குப் பாராட்டு விழா

★

5-9-67 செவ்வாய் மாலை 6-மணிக்கு

சென்னை -- வடபழனி சிங்காரவேலர் திடலில்

தலைவர்: **என். வி. நடராசன்** எம்.எல்.சி.

பாராட்டுரை: **அறிஞர் அண்ணா**

பொதுப் பணித்துறை அமைச்சர்

மு. கருணாநிதி

உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

திரு. **ம. பொ. சிவஞானம்** எம்.எல்.ஏ.

—பாராட்டு விழாக் குழு

ஆங்கில நீடிப்பு என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பே!

மசோதா வருவதும் ஐயத்துக்குரியதே!

மொரார்ஜியின் மனப்போக்கு--அமைச்சர் மாதவன் தரும் தகவல்

சென்னை, செப். 3—

"இந்தி பேசாத மக்களுக்குப் பண்டித நேரு வழங்கிய உறுதிமொழிக்குச் சட்டவடிவம் கொடுக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படுமா என்பது இன்னமும் ஐயப்பாட்டுக்குரியதாகவே இருக்கிறது; அப்படிக் கொண்டுவரப்பட்டாலும், இந்தி பேசாத மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அது இருக்காது"

என்று, தமிழகச் சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார். செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது :—

"ஆங்கிலம் காலவரையின்றி நீடிக்கும் என்பதும், அது, 'துணை ஆட்சி மொழியாக இருக்கும்' என்பதும் வெறும் கண்துடைப்பே என்பதை, சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் நடந்துகொண்ட விதமே தெளிவாக எடுத்துக்காட்டுகிறது."

ஒவ்வொரு மாநிலமும் சொந்த மொழியில் கருத்துக்களை வெளியிட உரிமை பெற்றிருக்கிறது; இந்தியாவுக்குப் பொதுவான மொழிச் சொற்களைத் தமிழகம் எதிர்க்கிறதென்றால், அது தமிழகத்தினுடைய விருப்பமாகும்.

இந்தியைத் தலைமை நீதிமன்ற மொழியாக ஆக்குவதன் மூலம், தமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே சட்டம் பயின்ற தமிழகத்தைச் சேர்ந்த உயர் நீதிமன்ற நீதிபதி, டெல்லித் தலைமை நீதிமன்றத்தில் பணியாற்ற முடியாது.

இந்தக் கேள்வியை, மாநாட்டில் நான் எழுப்பியபோது, 'மொழி பெயர்ப்பும் தரப்படும்' என்று கூறப்பட்டது; ஆனால் பதினான்கு மொழிகளிலும், மொழி பெயர்ப்புக் கொடுப்பது முடியாத காரியமாகும்.

'இந்தி, நேரடியாகவோ, மறைமுகமாகவோ திணிக்கப்படும்' என்று மொரார்ஜி கூறியதிலிருந்து, அவருடைய உண்மையான உருவத்தைக் காட்டிவிட்டார்!

மொரார்ஜியின் கருத்தை, இந்தி பேசும் மாநில உறுப்பினர்கள் ஆதரிக்கிறார்கள்!

அரியானாவும், வங்காளமும் தமிழகத்தின் கருத்தை ஆதரித்து நின்றன!

'இந்தியை ஏற்காவிட்டால், அரசியல் சட்டப்படி நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும்' என்று மொரார்ஜி கூறினார்; 'இந்த நாட்டின் குடிமகன்' என்ற முறையில் தன்னுடைய கருத்தை வெளியிட உரிமை உண்டு' என்று நான் கூறினேன்.

பதவி விலகுவதைப் பற்றிக் கூற, மொரார்ஜிக்கு உரிமையில்லை; அந்த உரிமை என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கே உண்டு."

விமான நிலையத்தில் வீர வரவேற்பு

சென்னை, செப். 3—

புதுடில்லியில் நடந்த சட்ட அமைச்சர்கள் மாநாட்டில், மொரார்ஜி தேசாயுடன் நேருக்கு நேராக இந்தியை எதிர்த்து முழங்கி, அறைகூவல் விட்டு வெற்றி வீரராக இன்று சென்னை திரும்பிய தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கட்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அமைச்சர் சாதிக்பாட்சா, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், மற்றும் பல கழக முக்கியஸ்தர்களும், மாணவர் தலைவர்களும் மலர்மாலையணிவித்து வரவேற்றனர்.

'இந்தி ஒழிக; தமிழ் வாழ்க; அறிஞர் அண்ணா வாழ்க; வெற்றி வீரர் மாதவன் வாழ்க' என விண்ணதிர முழங்கி மூவாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும், கழகத் தோழர்களும் வரவேற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.